**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 209/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 4 |
| Name : | மருத்துவர். ம.க.பாலாஜி |
| Father's/Husband Name: | து.மதுவாணன் |
| Village : | திருவள்ளூர் அரசு மருத்துவமனை |
| Taluk : | திருவள்ளூர் |
| Age : | 35/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 01.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது அரசு திருவள்ளூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் அரசு மருத்துவராக பணியிலிருந்த போது கடந்த 14.05.2022ம் தேதி காலை 11.50 மணியில் இருந்தபோது கொளஞ்சியம்மாள் (48/2022) க.பெ பழனிவேல் பென்னகோனம், குன்னம் வட்டம், பெரம்பலூர் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக வந்தார்.

அவரை விசாரணை செய்த போது 14.05.2022 அன்று காலை 08.45 மணியளவில் பாதிக்கப்பட்டவர் தனது வயலில் இருக்கும்போது அடையாளம் தெரிந்த ஒரு ஆண், ஒரு பெண் அவரை குச்சி மற்றும் கையால் அடித்ததாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்த போது சுயநினைவுடன் இருந்தார். அவருடைய முகத்தின் இடது பக்கத்தில் 2x2 cm அளவில் கன்றிய காயம் இருந்தது. அவரை நான்வெளி

நோயாளியாக சிகிச்சை முடித்து அனுப்பினேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றிதழ் அ.த.சா.ஆ. 2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நோயாளி என்னிடம் சிகிச்சைக்கு வந்த போது எந்த எதிரி கையால் அடித்தார் என்றும், எந்த எதிரி குச்சியால் அடித்தார் என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் இல்லை. வெளிப்புற காயத்தில் ரத்த கசிவு ஏதும் இருந்ததா என்றால் இல்லை. அ.சா.ஆ.3 மற்றும் 4ன் படி குச்சியால் அடித்ததற்கான அடையாளங்கள் குறித்து எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.